S.I.R. பணிகள் தொடங்கிய இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து

# நவ.11-ல் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்! ம.தி.மு.க.வினர் திரளாகப் பங்கேற்பு!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தலைமையில் – ம.தி.மு.க. நிர்வாகக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்!



சென்னை, நவ.9-

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகக் குழுக் கூட்டம், கழக அவைத் தலைவர் ஆடிட்டர் ஆ.அர்ஜுனராஜ் அவர்கள் தலைமையில் 07.11.2025 வெள்ளிக்கிழமை அன்று காலை, சென்னை, தலைமை நிலையம் தாயகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் கழகப் பொதுச்செயலாளர்வைகோ அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

பொருளாளர் மு.செந்திலதிபன், முதன்மைச் செயலாளர் துரை வைகோ எம்.பி., துணைப் பொதுச்செயலாளர்கள் செஞ்சி ஏ.கே. மணி, ஆடுதுறை முருகன், தி.மு.இராசேந்திரன், டாக்டர் ரொஹையா மற்றும் உயர்நிலைக்குழு உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

இந்தியாவில் தமிழ்நாடு உள்பட பத்து மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகள் (எஸ்ஐஆர்) தேர்தல் ஆணையம் அறிவித்தபடி நவம்பர் 4ஆம் தேதி தொடங்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் பீகாரில் சட்டமன்றத் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், அங்கு வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் மூலம் வாக்காளர் பட்டியலில் இருந்து இலட்சக்கணக்கில் உண்மையான வாக்காளர்கள் நீக்கப்பட்ட தகவல்கள் வெளியாகி அங்கு எதிர்கட்சிகள் எதிர்த்து வருகின்றன.

தேர்தலுக்கு மிக நெருக்கத்தில் அதுவும் பருவமழைக் காலமான நவம்பர், டிசம்பர் மாதங்களில் எஸ்.ஐ.ஆர். மேற்கொள்வது நடைமுறைச் சவால்கள் நிறைந்தது என தமிழ்நாடு முதல்வர் கூறியுள்ளார்.

### பா.ஜ.க.வுக்கு சாதகமாக தேர்தல் ஆணையம்

அவசரகதியில் செய்யப்படும் எஸ்.ஐ.ஆர். நடவடிக்கை என்பது மக்களின் வாக்குரிமையைப் பறித்து, பா.ஜ.க.வுக்கு சாதகமாக தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படும் சதியாக அமைந்துள்ளது.

குடிரியுரிமை திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் ஒருவரின் குடியுரிமையை தீர்மானிப்பதை எஸ்.ஐ.ஆர். பணியுடன் இணைத்துள்ளனர். அதைச் செய்வதற்கு தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் இல்லை.

2003ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தத்தைப் போல இதைப் பார்க்க முடியாது. இந்தத் திட்டம் மிக ஆபத்தானது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் விளைவு என்பது பீகாரில் நிரூபிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்னை முன்வைக்கப் பட்டாலும், தேர்தல் ஆணையத்திடம் இருந்து முறையான பதில் வரவில்லை.

தமிழ்நாட்டில் நவம்பர் 4-ஆம் தேதி முதல் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகள் தொடங்கி, டிசம்பர் 9 வரையில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணிகளும் டிசம்பர், 9 அன்று புதிய வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களிடம் ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவை டிசம்பர் 9 முதல் ஜனவரி 8 வரை பெறப்பட உள்ளது. 2026-ஆம் ஆண்டு ஜனவரி 31 வரை இந்தப் பணிகள் நடக்க உள்ளன.

பிப்ரவரி 7 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியாக உள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. மூன்று மாத காலத்தில் இந்த பணிகளை முடிப்பதற்கு கால அவகாசம் போதுமானது அல்ல.

பீகாரில் வாக்காளர் திருத்தப் பட்டியலில் நடந்த முறைகேடுகளை தமிழ்நாட்டிலும் செயற்படுத்த முனைந்து உள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையான தேர்தல் ஆணையத்தின் முயற்சிகளை ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள அனைத்துக் கட்சிகளும் முறியடிப்பது தலையாய கடமை என்பதை ம.தி.மு.க. நிர்வாகக்குழு தெரிவித்துக் கொள்கின்றது.

கடந்த அக்டோபர் 8-ஆம் தேதி ஒன்றிய தொழிலாளர் அமைச்சகத்தால் தயாரிக்கப்பட்ட தேசிய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புக் கொள்கை வரைவு பொதுமக்களின் கருத்துக்கேட்பிற்காக வெளியிடப்பட்டது. ஆனால், இந்த வரைவு அறிக்கை சமூக, பொருளாதார, பாலின சமத்துவமின்மையை வலியுறுத்தும் மனுஸ்மிருதி அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது என விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்த வரைவுக் கொள்கையில், உழைப்பு என்பதை 'இராஜதர்மம்' என வரையறுத்துள்ளது. இதில் "சமூக ஒற்றுமை, பொருளாதார ரீதியான வளமான வாழ்வு, மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகியவற்றை நிலைத்து நீடிக்கச் செய்வதில் உழைப்பு செலுத்துவது என்பது புனிதமான மற்றும் தார்மீக கடமையாகும்.

"இந்திய உலகக் கண்ணோட்டத்தின் படி, வேலை என்பது வெறும் வாழ்வாதாரத்திற்கானது மட்டுமல்ல. அது பரந்த தர்மத்திற்கு (பிறப்பின் அடிப்படையிலான கடமை) செய்யும் பங்களிப்புமாகும். இந்தக் கண்ணோட்டம் என்பது, அனைத்துத் தொழிலாளர்களையும் (கைவினைஞர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள் அல்லது தொழிலாளர்கள்) சமூக உருவாக்கத்தில் ஒரு அத்தியாவசிய பங்கேற்பாளராக அங்கீகரிக்கிறது.

"மனு ஸ்மிருதி, யாக்ஞவல்கிய ஸ்மிருதி, நாரத ஸ்மிருதி, சுக்ரநிதி மற்றும் அர்த்தசாஸ்திரம் போன்ற பண்டைய நூல்கள் ராஜதர்மம் என்ற நெறிமுறைகளை வெளிப்படுத்துகிறது. நீதி, நியாயமான ஊதியம் மற்றும் தொழிலாளர்களைச் சுரண்டலிலிருந்து பாதுகாப்பது ஆட்சியாளரின் கடமை என வலியுறுத்துகிறது" என இந்த வரைவு அறிக்கை தெரிவிக்கிறது.

### தொழிற்சங்க அமைப்புகளின் கருத்துகளை அறிய வேண்டும்!

ஆனால், பண்டைய காலங்களில் தொழிலாளர்களுக்கு எந்த உரிமைகளும் இல்லை; கூலி முறையும் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டி, பண்டைய இந்து நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட கொள்கைக்குப் பின்னால் உள்ள நோக்கத்தை நிபுணர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

உழைப்பை தர்மம் அல்லது இராஜதர்மத்துடன் ஒப்பிடுவது என்பது ஒரு மோசமான யோசனையாகும். ஏனெனில், அது தொழிலாளர்களின் உரிமைகள், நியாயமான ஊதியம் மற்றும் பாதுகாப்பைப் புறக்க ணிக்கிறது.

இந்துத்துவக் கருத்தியலின் இன்னொரு பரிணாமமாக வெளியிடப்பட்டுள்ள தேசிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை வரைவைக் கைவிடுவதுடன், தொழிற்சங்க அமைப்புகளின் கருத்துகளை அறிய வேண்டும் என்று மதிமுக வலியுறுத்துகிறது.

### கண்டன ஆர்ப்பாட்டம் திரளாக பங்கேற்போம்!

தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பு வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் கொண்டு வருவது வாக்காளர்களை நீக்கும் தந்திரம். பீகாரில் நடந்த இப்பணிக்கு எதிரான வழக்கில் இறுதி உத்தரவு இன்னும் பிறப்பிக்கவில்லை. இச்சூழலில் தமிழகத்தில் இதனை செய்வது ஜனநாயகத்துக்கு எதிரானது. தமிழகத்தில் தேர்தல் நடக்க சில மாதங்களே உள்ள நிலையில் இப்பணியை ஏற்க முடியாது. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் கால கட்டத்தில் பண்டிகைகள் வருவதால் வாக்காளர் பட்டியலில் சேர விரும்பும் வாக்காளர்களின் பெயர் விடுபட நேரிடும்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தமிழக மக்களின் ஓட்டுரிமைக்கு எதிரான செயல் என்பதால் இதனைக் கண்டித்து திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி சார்பில், நவம்பர் 11-ஆம் தேதி மாவட்டத் தலைநகரங்களில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மறுமலர்ச்சி திமுக நிர்வாகிகளும் தொண்டர்களும் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என்று கழக நிர்வாகக் குழு கேட்டுக் கொள்கிறது.

### அரசியல் கட்சிகள் நடத்தும் பொதுக்கூட்டங்கள்!

அரசியல் கட்சிகள் பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கு அரசின் சார்பில் விதிமுறைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அதில், பொதுக்கூட்டங்களுக்கு அனுமதி வழங்க வைப்புத் தொகை ஒரு இலட்சம் முதல் இருபது இலட்சம் வரை செலுத்த வேண்டும் என்றும், அரசியல் கட்சிகள் குறிப்பிட்டதை விட பொதுக்கூட்டத்தில் 50 சதவிகிதம் பேர் பங்கேற்றால் வைப்புத் தொகை திருப்பித் தரப்படாது என்றும் கூறப்பட்டிருப்பது நடைமுறைச் சிக்கல்களை ஏற்படுத்தும்.

மேலும் சாலைப் பேரணி நடத்துவதற்கும் தேசிய நெஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை அல்லது ஊராட்சி அமைப்புகளிடம் அனுமதி பெற வேண்டும் என்பது கட்டாயம் என்று சொல்லப்படுகிறது. நம்முடைய நிர்வாக முறையில் இது கூடுதல் கால விரயத்தை ஏற்படுத்துவதாகவும், அரசியல் கட்சிகளின் அடிப்படை ஜனநாயக உரிமையை பறிப்பதாகவும் அமைந்துவிடும். மேலும் அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளை அதிகார வர்க்கம் கட்டுப்படுத்தும் நிலைமையும் ஏற்படுத்தும்.

எனவே, அரசியல் கட்சிகளின் சாலைப் பேரணி மற்றும் பொதுக்கூட்டங்களுக்கு அரசின் சார்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள விதிமுறைகளை மாற்றி அமைக்க வேண்டும். இது குறித்து அரசியல் அமைப்புகள் மற்றும் பொதுநல இயக்கங்களின் கருத்துக்களையும் கேட்டு தீர்மானிக்க வேண்டும் என்று கழக நிர்வாகக் குழு கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நவ.11 அன்று

# திருநெல்வேலியில் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்!

நெல்லை.நவ.9–

முதலமைச்சர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுப்படி

தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (SIR) கொண்டு வந்துள்ள இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திருநெல்வேலி சந்திப்பு இரயில் நிலையம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 11.11.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி அளவில் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க

அலுவலகத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி ஆலோசனை கூட்டம் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம. கிரகாம்பெல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நிகழ்வில் மாநகர செயலாளர் கிழக்கு தினேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், காங்கிரஸ் கட்சி சார்பில் ரூபி மனோகரன் எம்.எல்.ஏ. மாநகர மாவட்ட காங்கிரஸ் தலைவர் சங்கரபாண்டியன், ம.தி.மு.க. மாநகர செயலாளர்கே.எம்.ஏ.நிஜாம், மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்ரீராம், பாஸ்கர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சடையப்பன், விடுதலை சிறுத்தை கட்சி சார்பில் அருள்செல்வன், சேகர்,

இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் எல்.கே.எஸ். மீரான்முகைதீன் முகம்மது அலி, கடாஃபி, மனித நேயமக்கள் கட்சி சார்பில் ரசூல்மைதீன், மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில் விஜயகுமார், கருணாகர ராஜா, ஜெகதீஷ்,

தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பில் உமர், அகமது பிரேம் நசீர்,

மனிதநேய ஜனநாயக கட்சி சார்பில் ஏ.எம்.பாரூக், அலிப் பிலால் அகில இந்திய பார்வடு பிளாக் கட்சி சார்பில் ஏ.ஜெ.சில்வர் பாண்டியன், கே.மணி பாண்டியன் ஆதிதமிழர் பேரவை கட்சி சார்பில் ராமமூர்த்தி,

தமிழ் புலிகள் கட்சி சார்பில் நெல்லை தமிழரசு தேவர் பேரவை சார்பில் மாரிபாண்டியன் உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



புதூர் ஊராட்சி ஒன்றியம், காடல்குடி கிராமத்தில் மகாத்மா காந்தி ஊரக தேசிய வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.26.32 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். நிகழ்வில் புதூர் வட்டார வளர்ச்சி அலுவலர் தினகர், புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், புதூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மும்மூர்த்தி, ஒன்றிய பொறியாளர்கள் ரவிச்சந்திரன், தமிழ்ச்செல்வன், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம் தமுக்கம் மைதானத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் வருகிற 22.11.2025 துவக்கி வைக்கப்பட்டு 03.12.2025 வரை 12 நாட்கள் நடைபெற உள்ள அகில இந்திய அளவிலான 200க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவி குழுக் கண்காட்சி விற்பனையாளர்கள் பங்கேற்கும் சரஸ் மேளாவில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார் தலைமையில் ஆய்வு செய்தார்.

பாரத சாரண – சாரணியர் இயக்க நிறுவன நாள் :

# சாரண - சாரணியர் எண்ணிக்கையை 15 லட்சமாக உயர்த்துவோம்!

## விருதுகளை வழங்கி அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேச்சு!




பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று முன்தினம் (07.11.2025) சென்னை, மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி அரங்கில் பாரத சாரண – சாரணியர் இயக்க நிறுவன நாள் விழா, மாநில விருது வழங்கும் விழா மற்றும் சாரண இயக்க இணையதள தொடக்கவிழா ஆகிய முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு, சாரண சாரணியர்களுக்கு விருதுகள் வழங்கி, சிறப்புரையாற்றி, குன்றத்தூர் வட்டாரக் கல்வி அலுவலகத்தினை திறந்து வைத்தார். இவ்விழாவில், திருப்பெரும்புதூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, பெற்றோர் ஆசிரியர் கழக துணைத்தலைவர் பி.வி.பி. முத்துக்குமார், மாநில முதன்மை ஆணையர் (பொ) முனைவர் க.அறிவொளி, மாநிலச் செயலர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், மாவட்ட முதன்மை ஆணையர் முனைவர். சாய் பிரகாஷ் லியோ முத்து, காஞ்சிபுரம் முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.நளினி, நிர்வாகிகள் மற்றும் 8000க்கும் மேற்பட்ட சாரண சாரணியர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, நவ.9-

சென்னை, மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி அரங்கில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பாரத சாரண சாரணியர் இயக்க நிறுவன நாள் விழா, மாநில விருது வழங்கும் விழா மற்றும் சாரண இயக்க இணையதள தொடக்கவிழா ஆகிய முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு, சாரண சாரணியர்களுக்கு விருதுகள் வழங்கி, சிறப்புரையாற்றி, குன்றத்தூர் வட்டாரக் கல்வி அலுவலகத்தினை திறந்து வைத்தார்.

விழாவில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது :-

இந்த ஆண்டின் தொடக்கம் என்பது ஒரு வைர விழா ஜாம்பூரியோடு தொடங்கி நீண்ட நாட்களாக 2019ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படாமல் இருந்த ராஜ்ய புரஸ்கார் அதற்கான இந்த மாநில விருதினை வழங்குகின்ற விழாவாக இந்த ஆண்டு சாரண சாரணியர் இயக்கத்திற்கான ஆண்டாகவே மாறி இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த விழா இந்த இயக்கத்தை ஆரம்பித்து தந்த நிறுவனருக்கான அந்த நாள், விருது வழங்க கூடிய இந்த நிகழ்வு, சாரண சாரண இயக்கத்திற்கான ஒரு இணையதளம் துவக்குதல் என முப்பெரும் விழாவாக கொண்டாடுகிறோம்.

இந்த விருது என்பது இங்கு இருக்கின்ற இந்த 9000 மாணவர்களுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற கிட்டத்தட்ட 75,000 மாணவச் செல்வங்களுக்கு வழங்கப்பட இருக்கின்றது என்பதே நமக்கான ஒரு மிகப்பெரிய பெருமை. இந்த ஆக்கத்தையும் ஊக்கத்தையும் இங்கிருந்து வழங்கி இருக்கின்ற முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய இயக்கத்தின் சார்பாக எங்களுடைய நன்றிகளை தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தனி மனிதனுடைய ஒழுக்கம் மிக மிக அவசியம் சுத்தமாக நாம் இருந்திட வேண்டும் கால்நடைகளை நாம் பராமரிக்க வேண்டும் அதற்கு நாம் பாதுகாப்பாக இருந்திட வேண்டும் இப்படி இந்த சுய ஒழுக்கத்திலிருந்து ஒரு மனித நேயத்தோடு எப்படி இருந்திட வேண்டும் என்பதற்கான நமக்கான வாழ்க்கை பாடத்தை சொல்லித் தருகின்ற இயக்கம் எது என்று சொன்னால் அது இந்த சாரண சாரணியர் இயக்கம் தான். நம்முடைய ஆட்சி மாற்றம் ஏற்படும்போது வெறும் 5 லட்சம் பேர் இருந்த உறுப்பினர்கள், தற்போது ஏறத்தாழ 10 லட்சம் பேராக இன்றைக்கு நாம் அதை மாற்றி காட்டியிருக்கிறோம் இனி வருகின்ற காலத்தில் இன்னும் அது 15 லட்சமாக உயர்த்திக் காட்டுவோம்.

இளைய சமுதாயம் எந்த தேவையில்லாத பழக்கத்திற்கும் அடிமையாக இருக்கக் கூடாது. நாம் ஒவ்வொருவரும் ஒரு மெண்டராக ஒரு அம்பாசிடராக இருக்க வேண்டும். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய காலத்தில்தான் இந்த இயக்கத்துக்கான பொன் விழா நாம் கொண்டாடினோம், இன்றைக்கு அவருடைய மறு உருவமாக இருக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய காலத்தில் வைர விழாவை நாம் கொண்டாடுகின்றோம்.

நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் வைர விழா மேடையில் அமர்ந்திருந்த போதே நான் சொன்னேன் வைர விழா மட்டும் அல்ல இன்னும் 25 ஆண்டுகள் தொடர்ந்து நம்முடைய திராவிட ஆட்சி தான் இருக்க போகின்றது அப்போது நூற்றாண்டையும் நாம்தான் கொண்டாடுவோம் என்று நான் சொல்லியிருந்தேன். ஆக அந்த அளவுக்கு இன்றைக்கு வருகை தந்திருக்கின்ற இந்த இளைய சமுதாயம் இந்த விருதுகளை நீங்கள் பெறும் பொழுது அந்த உற்சாகம் என்பது உங்களுடைய தனிப்பட்ட நபருக்கு மட்டுமல்ல உங்களை பார்த்து மற்றவர்களும் இந்த இயக்கத்திலே தங்கள் ஈடுபாட்டை கொள்ள வேண்டும் என்பதை ஊக்கப்படுத்துகின்ற விழாவாகத்தான் இந்த விருது வழங்குகின்ற இந்த நிகழ்வு நடைபெற இருக்கின்றது.

சட்ட மன்றத்தில் முதன் முதலாக சாரண சாரணியர் இயக்கத்தை பற்றி பேசுகின்ற ஒரு வாய்ப்பை பெற்ற ஒரு அமைச்சராக நான் இருந்தேன் என்பதை என்னுடைய வாழ்நாள் பெருமையாக நான் கருதுகின்றேன். 1927இல் மகாத்மா காந்தி அவர்கள் வந்து சுதேசி இயக்கத்துக்கு உங்களுடைய ஆதரவை வழங்க வேண்டும் என்று சொன்னாரோ அதே இடத்தில் ஏறத்தாழ 9 கோடி ரூபாய் நம்முடைய முதலமைச்சர் ஒதுக்கிடு செய்து புதிதாக நமக்கான ஒரு தலைமை அலுவலகத்தை அங்கு உருவாக்குவதற்கான அந்த பணியும் இன்றைக்கு நடைபெறுகிறது என்று சொல்லும் பொழுது நம்முடைய முதலமைச்சருக்கு எங்களுடைய நன்றிகளை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1950களில் திருச்சி, தஞ்சை, கரூர், திரு நெல்வேலி, மாமல்லபுரம் பகுதிகளில் செயல்பட தொடங்கிய இந்த இயக்கத்தில் இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் 10 லட்சத்தை கடந்து நம்முடைய மாணவச் செல்வங்கள் இந்த இயக்கத்திலே தங்களை ஈடுபடுத்தி கொண்டிருக்கின்றார்கள். தொடர்ந்து நாம் பயணிப்போம். உங்களுக்காக இங்கே வருகை தந்திருக்கின்ற எங்களுடைய பயிற்றுனர்களாக இருக்கக்கூடிய நமது சாரண சாரணியர் இயக்கத்தை சார்ந்திருக்கின்ற ஒவ்வொரு ஆசிரியர் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்து கொள்கிறேன்.

ஒரு திட்டமிடலோடு மிகவும் சிறப்பாக நடத்தப்பட்ட ஒரு ஜாம்போரியை இதற்கு முன்னாள் நாங்கள் பார்த்ததே இல்லை என வெளிநாட்டினரும் சொல்லும் அளவுக்கு திருச்சி மணப்பாறையில் அந்த மிகப்பெரிய ஜாம்போரியை நாம் நடத்தி காட்டி இருக்கிறோம்.

விருது பெற வருகை தந்திருக்கின்ற உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள். உங்களுக்கு விருது தந்து உங்களை பெருமைப் படுத்துகிறோம் என்று சொல்வதைக் காட்டிலும் உங்களுக்கு விருதுகளை தருவதன் மூலமாக அந்த பெருமை எங்களுக்கு நாங்களே தேடிக்கொள்கிறோம். வருகை தந்திருக்கின்ற உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இவ்விழாவில், திருப்பெரும்புதூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, பெற்றோர் ஆசிரியர் கழக துணைத்தலைவர் பி.வி.பி.முத்துக்குமார், மாநில முதன்மை ஆணையர் (பொ) முனைவர் க.அறிவொளி, மாநிலச் செயலர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், மாவட்ட முதன்மை ஆணையர் முனைவர். சாய் பிரகாஷ் லியோ முத்து, காஞ்சிபுரம் முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.நளினி, நிர்வாகிகள் மற்றும் 8000க்கும் மேற்பட்ட சாரண சாரணியர்கள் கலந்து கொண்டனர்.